கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

**முன்னிலை திருமதி.ப.சிவரஞ்ஜினி, B.Sc.,LL.M.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

அருப்புக்கோட்டை.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**வழக்கிடை மனு எண்.5/2025**

**உள்**

**வழக்கிடை மனு எண்.1/2022**

**உள்**

**அசல் வழக்கு எண்.134/2022**

----

சுப்பாரெட்டி ---மனுதாரர்/வாதி

-எதிர்-

1. திருவேங்கடம்
2. பாலசுரேஷ்
3. சீனிவாசன்
4. பாலாமணி
5. நாகரத்தினம்
6. தனுஷ்கோடி
7. முத்துராமன் --1 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 7 பிரதிவாதிகள்

பொன்ராஜ்

த/பெ.ராமசாமி

--8-வது எதிர்மனுதாரர்/8 வது சேர்க்கப்பட வேண்டிய பிரதிவாதி

இம்மனுவானது 12.11.2025 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 27.02.2026 ம் தேதியன்று இந்த நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.M.ஆறுமுகம் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.முத்துமணி அவர்கள் முன்னிலையாகியும், 2 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 3 முதல் 7 பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், 8 ம் எதிர்மனுதாரர்/8 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.பாலாஜி அவர்கள் முன்னிலையாகியும் இருந்த நிலையில், இருதரப்பு

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.27 12:30:43 +0530

வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்காக இருந்துவந்த இம்மனுவினை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்....

## உத்தரவு

எதிர்மனுதாரர் பொன்ராஜ் அவர்களை இடையீட்டு மனு 1/2022–ல் 8–ம் எதிர்மனுதாரர் /8–ம் பிரதிவாதியாக சேர்க்க உத்தரவிட வேண்டி, இம்மனுவானது, உ.வி.மு.ச. கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்**:

(i) அசல் வழக்கில் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் மற்றும் கடந்த 15.02.1956 மற்றும் 08.06.1961ல் பிரதிவாதிகள் எழுதிகொடுத்த கிரைய ஆவணங்கள் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் வழங்க வேண்டியும் மற்றும் கடந்த 29.05.1972–ம் தேதியன்று 1ம் பிரதிவாதிக்கு அவரது மாமா எழுதிக் கொடுத்த தான்செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் வழங்க வேண்டியும் மற்றும் பிரதிவாதிகள் மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட மனுசொத்தினை எந்த இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை வழங்க உத்திரவிட வேண்டி அசல் வழக்கு தாக்கல் செய்து தற்போது வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது எனவும், மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டும் மற்ற பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாததால், ஒருதலைபட்ச உத்தரவு வழங்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் தரப்பு சாட்சியத்திற்காக மனுதாரர் வாதுரை மற்றும் ஆவணங்கள் மற்றும் 1–ம் பிரதிவாதியின் எதிருரை ஆகியவற்றை பார்க்கும்போது, மேற்படி வருவாய் துறையிலிருந்து தாவா சொத்திற்கு வழங்கப்பட்ட பட்டாவில் 8–வது எதிர்மனுதாரர்/8–வது சேர்க்கப்பட வேண்டிய பிரதிவாதி பொன்ராஜ் பெயரும் இடம் பெற்றுள்ளது எனவும், மேலும் மேற்படி பொன்ராஜ் அவர்களின் பெயர் பட்டாவில் தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளதாவும், அவர் பெயரை நீக்கம் செய்ய மனுதாரர் தரப்பில் வருவாய் துறையில் மனு செய்துள்ளதாக மனுதாரரின் வழக்குரை பக்கம் 5–ல் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், ஆனால் அவரை

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.27 12:30:48 +0530

தரப்பினராக மனுதாரர் அசல் வழக்கில் சேர்க்கவில்லை என்பது மனுதாரருக்கு தெரியவந்துள்ளது.

(ii) மேலும் வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில். 8–வது எதிர்மனுதாரர்/8–வது சேர்க்கப்பட வேண்டிய பிரதிவாதி பொன்ராஜ் அவர்களை வழக்கின் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியம் எனவும், மேற்படி அசல் வழக்கில் 8–வது எதிர்மனுதாரர்/8–வது சேர்க்கப்பட வேண்டிய பிரதிவாதி பொன்ராஜ் அவர்களின் பெயரினை சேர்க்காது போனால் மனுதாரர்/வாதிக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் எனவும், 8–வது எதிர்மனுதாரர்/8 வது சேர்க்கப்பட வேண்டிய பிரதிவாதி பொன்ராஜ் அவர்களை தரப்பினராக சேர்ப்பதில் பிரதிவாதிக்கு எந்த பிரச்சனையும் ஏற்பட போவதில்லை எனவும், மேற்படி இடையீட்டு மனு 1/2022ல் 8–வது எதிர்மனுதாராக பொன்ராஜ் அவர்களை சேர்க்க உத்திரவிட வேண்டி இந்த இடையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 2ம் <u>எதிர்மனுதாரர்/ 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த மறுப்புரையின் சுருக்கம்:–</u>

(1) மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். இவ்வழக்கு 2022ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எனவும், மனுதார் தற்போது வழக்கு விசாரணைக்காக வரும்போது தாவா சொத்திற்கு வழங்கப்பட்ட பட்டாவில் சேர்க்கப்பட வேண்டிய பொன்ராஜ் பெயரும் உள்ளதாகவும், அது தவறு என்றும், எனவே அவரை தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று கூறி இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லாது எனவும், தவறாக சேர்க்கப்பட்டிருந்தால் ஏன் அவரை வழக்கில் சேர்க்க வேண்டு என்பதற்காக எந்த விளக்கமும் இல்லை எனவும், எதிர்மனுதாரர் பாத்தியம் கொண்டாடும் சொத்தில் மனுதாரருக்கோ, பொன்ராஜ்க்கோ எவ்வித பாத்தியமும், அனுபவமும் இல்லை எனவும், மனு அலைக்கழிவானது எனவும், எனவே, மனுதாரரின் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல்.

4. <u>பிரச்சினை : –</u>

**இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா ? என்பதே ஆகும்,**

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.27 12:30:54 +0530

**5.** இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்/வாதியின் மனு மற்றும் 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியின் மறுப்புரை பரிசீலிக்கப்பட்டது. 1 மற்றும் 8ம் எதிர்மனுதாரர்கள்/1 மற்றும் 8ம் பிரதிவாதிகள் தரப்பில் மறுப்புரை எதுவும் இல்லை என்று மேல்ஒப்பம் செய்யப்பட்டது.

**6.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7.** வழக்கு கோப்பை பரிசீலிக்கையில், மனுதாரர்/வாதி தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், கிரைய ஆவண எண்.2005/1956, 618/1961 மற்றும் தான ஆவணம் 430/1972 ஆகிய ஆவணங்களை செல்லாது என்று விளம்புகை செய்யக் கோரியும் தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி, இடைக்கால மனு எண்.1/2022 தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவில், விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், 8ம் எதிர்மனுதாரரான பொன்ராஜை இடைநிலை மனு எண்.1/2022ல் 8ம் எதிர்மனுதாரர்/8ம் பிரதிவாதியாக சேர்க்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

**8.** மனுதாரர்/வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், 8ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், அவரை இடைநிலை மனு எண்.1/2022ல் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியம் என்றும், ஆகையால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்றும் வாதிட்டார்.

**9.** 1 மற்றும் 8ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், எவ்வித மறுப்புரையும் இல்லை என்று மேல் ஒப்பம் செய்யப்பட்டது. 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், 2022ம் ஆண்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, தற்போது பொன்ராஜ் பெயரில் தாவா சொத்தில் பட்டா வழங்கப்பட்டுள்ளதால், அவரை தரப்பினராக சேர்க்க வேண்டுமென்று தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி செல்லாது என்றும், ஆகையால் இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் வாதிட்டார்.

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.27 12:31:01 +0530

**10.** மனுதாரர்/வாதி அவரது மனுவில், 8ம் எதிர்மனுதாரர்/சேர்க்கப்பட வேண்டிய 8ம் பிரதிவாதி பெயரில் தவறுதலாக பட்டா ஏற்பட்டுள்ளது என்றும், அதனை மனுதாரர்/வாதி அவரது வழக்குரை பக்கம் 5ல் குறிப்பிட்டுள்ளார் என்றும், ஆனால் மேற்படி 8ம் எதிர்மனுதாரர் பொன்ராஜை இவ்வழக்கில் சேர்க்காமல் விடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ள நிலையில், இந்நீதிமன்றம் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள பிராதினை பரிசீலித்தது. மேற்படி பரிசீலனையில் மனுதாரர்/வாதி அவரது வழக்குரையில், பாரா 6ல் மேற்படி பொன்ராஜ் பெயருக்கு தவறுதலாக பட்டா ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும், மேற்படி பொன்ராஜை இவ்வழக்கில் அவசிய தரப்பினர் என்றும், 1ம் பிரதிவாதி அவரது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளதும் தெரியவருகிறது. ஆகையால், மேற்படி பொன்ராஜை இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினராக சேர்க்காதது குறித்து எழுவினாவும் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. ஆக, பொன்ராஜ் பெயரில் தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதாலும், அவர் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்று 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எடுத்துரைப்பட்டு, அவசிய தரப்பினர் குறித்து இவ்வழக்கில் எழுவினா வனையப்பட்ட காரணத்தினாலும், வழக்கு சொத்து குறித்து மனுதாரர்/வாதி விளம்புகை பரிகாரம் கோரிய காரணத்தினாலும், பொன்ராஜை இடைநிலை மனு எண்.1/2022ல் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனு அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகையால், 8ம் எதிர்மனுதாரரை, இடைக்கால மனு எண்.1/2022ல் 8ம் எதிர்மனுதாரராக சேர்க்க வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,** இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

மேற்படி, உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ம் நாள் பகரப்பட்டது.

SIVARANJINI P Digitally signed by SIVARANJINI P Date: 2026.02.27 12:31:07 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அருப்புக்கோட்டை.**

<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :– இல்லை

<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> – இல்லை

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.27 12:31:12 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அருப்புக்கோட்டை.**

-----------------------------------

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை.
இடைநிலைமனு எண்.05/2025
**உள்**
இடைநிலைமனு எண்.01/2022
**உள்**
அ.வ.எண்.134/2022
சீரான/வரைவு உத்தரவு
நாள் – 27.02.2026

-----------------------------------